இது மூவருடக் காட்லாக் 8(a) நம்பர் பிரதியில் நின்றும் எழுதப் பெற்றது. முற்றும் உள்ளது. இது வைத்திய விஷயமானது. போகர் என் னும் சித்தர் பெரியார் இயற்றியதாகும். இதில் பலகற்பவகைகளும் அவை களுக்கு ஆகாத வத்துக்களின் பெயர்களும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. பிழை யுள.

R. No. 1037.

Pape. ¾ × 9¾ inches. Foll. 2. Lines, 20 on a page. Tamil Good. New.

Restored in 1931–32 from a MS. of this Library.

Foll. 1a—2a.

(*a*) சம்போகநாதர் வாதசித்தி.
SAMBHŌGANĀTHAR VĀDASIDDHI.

Same work as that described under R. No. 563(*g*) ante.

Complete.

(கு-பு.)—

இது மூவருடக் காட்லாக் 563 (g) நம்பர் பிரதியில் வந்துள்ளதைப் பார்த்து எழுதி வைத்ததாகும். முற்றும் உள்ளது. பிழையுள

(B) வைத்திய நூல்:
VAIDDIYA NŪL.

Foll. 3*a*—27*b*

On the preparation of different kinds of medicines.

Beginning:

*மிளகரணைப்பட்டை அகிற்பட்டை பொரிவிளாப்பட்டை பேராமுட்டி கூட்டி பெலாப்பட்டை கொடிவேலி காட்டு முருங்கப்பட்டை தூதுவளை வேர் உத்தாமணி வேர் பூனைக்காஞ்சோறி வேர் முக்காவேளை நிலவேம்பு வேப்பம் பட்டை மூக்கத்தாரிவேர் முள்ளிச்சுண்டை வேர் முள் முருங்கப்பட்டை விசிறிவேர் ஆதொண்டம் வேர் மாவிலிங்கம்பட்டை சிறுகிளாவேர் புங்கம் வேர், சங்கம் வேர் * * * * * * * * * மூக்குறட்டைவேர் சத்திசாரணவேர், சிற்றாமணக்குவேர் இலுப்பைப்பட்டை, வட்டக் கிலு கிலுப்பை வேர் . . . . வில்வபத்திரி வேர்*

End:

*தும்மட்டிக்காய் பசுவின் . . . . சுட்டுத் துவைத்து விதை விழாமல் நாழி காடியிற் பிழிந்துகொண்டு பனைவெல்லம் (பலம்) நான்கு போட்டுக் காய்ச்சுகிறபோழ்து இலேஹிய பக்குவத்தில் சுக்கு பலம் அரை, மிளகு பலம் அரை, திப்பிலி பலம் அரை, தூம்பராஷ்டகம் பலம் கால் பொடி செய்து போட்டுத் துழாவி இறக்கிக்கொண்டு * * * * * * * * * * திப்பிலி பலம் கால் சுக்கு பலம் கால், கடுச்சாய் நெல்லிக்காய்க் கிஷாயத்தில் அறைத்து அவரைக் கொட்டைப் பிரமாணம் குளிகை பண்ணிக் கொடுக்கவும்.*

(கு-பு.)—

இந்நூல் வைத்தியத்தைச் சார்ந்தது. இதில் அநேக வகை மருந்துகளுடைய முறைகள் வசன நடையிற் கூறப்பட்டுள்ளன. பிழையுள.

R. No. **1038.**

Paper. $10\frac{3}{4} \times 9\frac{1}{4}$ inches. Foll. 21. Lines, 20 on a page. Tamil, Good. New.

Restored in 1931–32 from a MS. of this Library.

இலக்ஷ்மீகாந்த சதகம்.
ILAKṢMĪKĀNTAŚATAKAM.

Same work as that described under No. D. 1050, Tamil Descriptive Catalogue. Vol. II.

Complete

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக் 1050-ஆவது நம்பர் பிரதியைப் பார்த்தெழுதப் பெற்றுள்ளது. முற்றுமுள்ளது. பிழையுள.

R. No. 1039.

Paper. 10¼ × 9¾ inches. Foll. 5. Lines, 20 on a page. Tamil. Good. New

Restored in 1931-32 from a MS. of this Library.

வைத்திய நூல்.

VAIDDIYA NŪL.

Wants 10 stanzas in the beginning

A treatise, in verse, on medicine, dealing with the diagnosis of diseases and the method of preparing suitable medicines for curing them.

Beginning :

பையரவல்குன் மாதேபாருள்ளோர் கழிந்த நீரில்
கையிலே யெண்ணெய் வாங்கிக்கழிந்த நீர்தன்னிற் குத்தின்
மையுறுமேனியொத்து வட்டஞ் செய்திருக்குமாகில்
ஐயுறுநீரதாகு மல்லதாய்ப் பித்தமாமே. (கய)

பூனையுந் திணமும்போல முதிர்ந்த சுக்கிலமும்போலே
நீளியநரம்புபோல நீரிலே தோன்றுமாகில்
ஆளெறிவேலுங்கோலு மனங்களைக்காயுவீராய்
வாளையும் வென்றகண்ணாய் வாதமு நான்கதாமே (யக)

End :

சமூல மோரிதழ்த்தாமரையும் தாவுங்குளிர்தாமரைவித்து
ம மூலம் நல்ல பிண்ணாக்கும் நத்தையிறைச்சிதுவரையொடு
வ மூலமான விலைவயைந்து மடங்கவுலர்த்திப் பொடிசெய்து
மு மூல விதான மிதிற்சேர்த்து மோரிற் குடிக்கவல் லீரா
ய மூலமான நீரிழிவு முடனே வற்றுமுண்மையிதே. (ருய)

ஈயங்காந்த மிங்குலிய மிலைதா நாற்கழஞ்சோரொன்று
சேயசட்டி தனைவைத்துச் சிவக்கக்காய்ச்சி யதைவறுத்துச்
சேய குளிகை யிருபத்தொன்றைச் சிறந்தமோர் வார்த்தரைத்து
ருட்டிப்
பைய மோரிலோருண்டை பரிந்துகுடிக்க வல்லீராய்
நையமுட்டுக் காவேரி நடுக்கக்கட்டு டணையிதுவே. (ருக)

(கு-பு.)—

இந்த நூல், வைத்தியத்தைச் சார்ந்து அந்நூல்களுடைய முறைமைப் படி நீர்க்குறி முதலிய பலவகை யடையாளங்களால் வியாதிகளை நன்குணரு மாற்றையும், அவைகட்குரிய மருந்துகள் வைக்குமுறையையும் செய்யுள் நடையான் உணர்த்துகின்றது. இந்நூலின் செய்யுட்களுடைய மொத்த வெண் இத்துணைத்தென்று தெரியவில்லை. இப்பிரதியில் முதலில் பத்துப் பாடல்கள் இல்லை. ஐம்பத்தொரு பாடல்கள் உள. பிழைகள் பலவுள.

R. No. 1040.

Paper. 10¾ × 9¾ inches. Foll. 60. Lines, 5 on a page. Tamil and Grantha. Good. New.

Restored in 1932-33 from a MS. of this Library.

அந்திமோபாய நிஷ்டை.

ANTĪMŌPĀYA NIṢṬHAI.

Same work as that described under No. R. 116, ante.

Incomplete.

(கு பு.)—

இது மூவருடக் காட்லாக் 116 ஆவது நம்பர் மூலப் பிரதியைப் பார்த்து எழுதப்பெற்றது. நடுவில் ஒரு சிறிது பாகம் இதன் மூலப் பிரதியில் மிகவுங் கிழிந்தும் அழுக்கடைந்து மிருப்பதால் அப்படி பாகம் இப்பிரதியில் எழுதப் பெறாமல் விடப்பட்டிருக்கிறது.

R. No 1041.

Paper. 10¾ × 9¼ inches. Foll. 56. Lines, 20 on a page. Tamil and Grantha. Good. New.

Restored in 1932—33 from a MS. of this Library

வேதாந்தாசார்ய வைபவ ப்ரகாசிகை.

VĒDĀNTĀCĀRYA VAIBHAVA PRAKĀŚIKAĪ.

Same work as that described under No R 104 *b*. ante.

Complete.

(கு·பு.)—

இது மூவருடக் காட்லாக் 104-b நம்பர் பிரதியில் வந்ததைப்பார்த்து எழுதப்பெற்றதாகும். நூலாசிரியர்-ஸ்ரீவத்ஸகோத்திரத்துக் கோவிந்தாசார் என்பவரது மகனாராகிய (மஹாசார்யர்) தொட்டையாசார் என்பவராவர் இது பெரும்பாலும் கந்தாடை தொட்டையாசார் வடமொழியில் இயற்றிய 'வைபவப்ரகாசிகையை'த் தழுவியே மணிப்ரவாள நடையின் அமைந்துளது வசன நடையில் சிறிது பிழையுள்ளது. அதில் இல்லாத சிறிது பாகம் இதிற் கூறப்பெற்றிருக்கிறது.

R. No. 1042.

Paper. 10¾ × 9¼ inches. Foll, 8. Lines, 20 on a page. Tamil. Good.

Restored in 1932–33 from a MS. of this Library.

அகஸ்தியர் நிகண்டு நூற்றுப்பதினாறு.

AKASTIYAR NIGHAṆṬU NŪṚṚUPPADINĀṚU.

Same work as that described under No. 167 of the Tamil Triennial Catalogue Vol II., being a copy of the work described therein..

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 167 ஆவது நம்பரில் வந்துள்ளதைப் பார்த்து எழுதி வைத்தது.

R. No. 1043.

Paper. 10¾ × 9¾ inches. Foll 86. Lines, 20 on a page. Tamil. Good.

Restored in 1933–34 from a MS. of this Library.

முதல் திருவந்தாதி வியாக்கியானம்,

MUDAL TIRUVANTADI VIYAKKIYANAM.

Same work as that described under No. 917 of the T. T. C. Vol. VI, being a copy of the work described there in.

(கு - பு.)—

இந்நூல், மூவருடக் காட்லாக்கு 917 - ஆவது நம்பரில் வந்துள்ள நூலைப்பார்த்து எழுதி வைத்ததாகும். மூலப்பிரதியிலே மிகவும் சொற்பிழை, எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றனவாதலின் இப்பிரதியில் ஒருவாறு சிறிது செவ்வனே எழுதிவைக்கப்பட்டுள்ளது.

R. No. 1044.

Paper. 10¾ × 9¾ inches. Foll. 73. Lines, 20 on a page. Tamil. Good.

Restored in 1933–34 from a MS. of this Library.

மூன்றுந் திருவந்தாதி வியாக்கியானம்.

MŪNṞAN TIRUVANTADI VIYĀKKIYĀNAM.

Same work as that described under No. 952 anti, being a copy of the work described therein.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 952 - ஆவது நம்பரில் வந்துள்ளதைப் பார்த்து எழுதிவைத்ததாகும்; மூலப்பிரதியிலேயே மிகச் சொற்பிழை எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றனவாதலின் இதில் ஒருவாறு செவ்வனே எழுதிவைக்கப்பட்டுள்ளது.

R. No. 1045.

Paper. 11 × 9¾ inches. Foll. 49. Lines 20 on a page. Tamil, Good, New.

Restored in 1933–34 from a MS. of this Library.

பெரிய திருவந்தாதி வியாக்கியானம்.

PERIYATIRUVANTADI VIYAKKIYĀNAM.

Same work as that described under No. 91 ante, being a copy of the described therein.

(கு-பு)

இந்நூல், மூவருடக்காட்லாக்கு 916 ஆவது நம்பர் பிரதியைப்பார்த்து எழுதிவைத்ததாகும்.

R. No. 1046.

Paper. 10 × 9¾ inches. Fol. 66. Lines, 20 on a page. Tamil. Good. New.

Restored in 1933–34 from a MS. of this Library.

இராமாநுச நூற்றந்தாதி வியாக்கியானம்.

IRĀMĀNŪJANŪṞṞANTĀDI VIYĀKKIYĀNAM.

Same work as that described under No. 951 ante, being a copy of the work described therein.

(கு-பு).—

இந்நூல், மூவருடக்காட்லாக்கு 951 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலைப்பார்த்து எழுதிவைத்ததாகும்; மூலப்பிரதி மிகவும் பிழையுடன் காணப்படுகின்றது. ஆதலின் இப்பிரதியில் ஒருவாறு சுத்தமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது.

R. No. 1047.

Paper. 11 × 10 inches. Foll. 176. Lines, 20 on a page. Tamil. Good. New

Restored in 1934 from a MS. of this Library.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾 (தமிழ் மொழிபெயர்ப்பு).

BRA-MĀNANDAPRAKĀŚIKĀ (VIṢNUSAHASRANĀMAVYĀKHYĀ)

A rendering, in the Maṇipravāḷa style, of a work entitled "Brahmānandaprakāśikā, which is a commentary, by Śri Śaṅkarācārya, on Śri Viṣṇusahaśranāmastotra.

Beginning :

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌶𑌶𑌿𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌘𑍍𑌨𑍋𑌪𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 || (௧)

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌪𑌰𑌮𑌸𑍁𑌖𑌦𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂
𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌤𑍀𑌤𑌂 𑌗𑌗𑌨𑌸𑌦𑍃𑌶𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍍 |
𑌏𑌕𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌮𑌲𑌮𑌚𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌧𑍀𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑌂
𑌭𑌾𑌵𑌾𑌤𑍀𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌰𑌹𑌿𑌤𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂 𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 || (௨)

𑌗𑍁𑌰𑌵𑍇𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌭𑌿𑌷𑌜𑍇𑌭𑌵𑌰𑍋𑌗𑌿𑌣𑌾𑌮𑍍 |
𑌨𑌿𑌧𑌯𑍇𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 || (௩)

𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌞𑍍𑌜𑌨𑌶𑌲𑌾𑌕𑌯𑌾 |
𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌨𑍍𑌮𑍀𑌲𑌿𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌤𑌸𑍍𑌮𑍈𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 || (௪)

𑌅𑌖𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍 |
𑌤𑌤𑍍𑌪𑌦𑌂|𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂𑌯𑍇𑌨 𑌤𑌸𑍍𑌮𑍈𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 || (௫)

ஸ்தாவரம் ஜங்கமம் சைவ யத்கிஞ்சித் ஸசராசரம் |
த்வம்பதம் தர்சிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம: || (எ)

ஸம்வித்ரயம் ஸதாபூர்ணம் ஸச்சிதாநந்தவிக்ரஹம் |
தத்பதம் தர்சிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம: || (அ)

பாராசர்யம் பரமபுருஷம் விச்வவேதைகயோநிம்
வித்யாதாரம் விபுலமதிதம் வேதவேதாந்தவேத்யம் |
சச்வச்சாந்தம் . . . . சி . . . விஷயம் சுத்ததேஜோவிசாலம்
வேதவ்யாஸம் விகதசமலம் ஸர்வதாஹம் நமாமி || (௰௧)

ஸஹஸ்ரநாமவ்யாக்யேயம் ப்ரஹ்மாநந்தப்ரகாசிகா |
சங்கரேண ஸமஸ்தாநாம் . . . தீபிகா ||

ஆதியிலே சங்கராசார்யரானவர் இந்தப் பூலோகத்திலே ஜநித்திருக்கிற ப்ராணிகளுக்குப் பரமமாக விருக்கும்படியான உபகாரத்தைப் பண்ணக்கடவராய்க்கொண்டு ஸஹஸ்ரநாமக்ரந்தத்திற்கு வியாக்கியானத்தைப் பண்ணினார். சகலப்ராணிகளுக்கும் பரம புருஷார்த்தம் எதுவென்றால் (அத்வைதிக்கு) ப்ரஹ்மைகத்வ ஜ்ஞாநத்தினாலே ஜ்ஞாநஸ்வரூபமாக விருக்கிறது மோக்ஷம் பரம புருஷார்த்தம் என்று சொல்லப்படும் : ஆகையினாலே இந்த விஷ்ணுஸஹஸ்ரநாம ஜபத்தினாலேயும் இந்த ஸஹஸ்ரநாமத்தினுடைய அர்த்த்தை யறிந்தபடியினாலேயும் பரமேச்வரப்ரஸாதத்தினாலேயும் ஸகலப்ராணிகளுக்கும் நித்யாநித்யவஸ்து விவேகமும் இஹாமுத்ரார்த்தபலபோக விராகமும். சமாதி ஸாதந ஸம்பத்தியும், முமுக்ஷுத்வமும், என்கிற விந்த நாலு வகையாயிருக்கிற ஜ்ஞாநஸாதநங்களும் சீக்ரமாகவரும். உடனே தானே ச்ரவணமநந நிதித்யாஸநத்வாரா ப்ரஹ்மாத்மைகஜ்ஞாநமும் வரும். ஜநித்தவுடனே ப்ராரப்தகர்மக்ஷயபர்யந்தம் ஜீவன் முக்தனுக் ஜ்ஞாநைகரஸஸ்வரூபனாகவிருந்து அந்த்ய காலத்தில் விதேஹ முக்தி வரும். அப்போது ஸச்சிதாநந்தாத்விதீய நித்யமுக்த பரிபூர்ணாநந்தஸ்வரூபமாக விருக்கிற பரமபுருஷார்த்தம் லபிக்கும் என்று நிச்சயித்து பரமகாருணிகராயிருக்கிற ஸ்ரீசங்கராசார்யஸ்வாமி ஸகல ப்ராணிகளுக்கும் விஷ்ணுஸஹஸ்ரநாமத்துக்கும் அர்த்தம் தெரியவேண்டி வியாக்கியானத்தைப் பண்ணுகிறார். * * * * *

End

நித்யஜ்ஞாநம் ஸாமாந்யதோவ்யாப்தத்வாத் ஸ்நாநாதி நித்யகர்மங்களாலே ஜ்ஞாநம் வரும் உடனே ஸம்ஸாரபந்தத்தில் நின்று தத்வாத் முக்தியையடைவன் யதோக்தஸர்வஜ்ஞ: ஜ்ஞாநனு ஜ்ஞாநாபேக்ஷாயிதத்வாத் தர்மானுஷ்டானத்தினாலே விவிதஸர்வமும்

சநஜ்ஞரம் ஜ்ஞாநத்தினால்தானே மோக்ஷம் வரும்-

யோகிநஃ கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்மஶுத்தயே |
கர்மணா பத்யதே ஜந்துர் வித்யயா ச விமுச்யதே ||

* * * * * * கர்த்ருகர்மாபிமாநத்தினாலே ஸம்ஸாரபந்தம் வரும் ஆகையினால் ஸர்வாத்மநா கர்மபலத்தை இச்சியாமல் நித்யநைமித்திக கர்மங்களை மாத்ரம் அனுஷ்டிப்பார். சித்தசுத்தி வந்து ஜ்ஞானம் வரும் வந்த உத்தரக்ஷணமே யதீஶ்வரர்களாக ஸந்யாஸத்தைப்பண்ணி பரமஹம்ஸர்களாக ஆத்மாவைத் தானே ஸர்வ ஸாக்ஷாத்காரம்பண்ணிக்கொண்டு அவர்கள் க்ருதார்த்தர்கள் தானே: ஸந்தேஹம் இல்லை * * * * * * * * *

சார்வரிஞு மார்கழிமீ ௰கஉ எழுதினது. ஸ்வஸ்தி:

(கு - பு.)—

இந்நூல் விஷ்ணு ஸ்ஹஸ்ரநாமஸ்தோத்ரத்துக்கு ஸ்ரீமத் சங்கராசாரியர் "பிரஹ்மானந்தப்ரகாசிகை" என்ற பெயரான் இயற்றியுள்ள வியாக்கியானத்துக்குத் தமிழ் மொழிபெயர்ப்பாய் மணிப்ரவாள நடையான் அமைந்துள்ளது : நடையழகு அத்துணை சிறப்பில்லை : இயற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லை. இப்பிரதியும் பிழையுடன் உள்ளது. அங்கங்கே எழுத்துகள் விடப்பட்டுள்ளன ; அங்கங்கே மேற்கோளாக எடுக்கப்பட்ட வடமொழி ஸ்லோகஙகள் எல்லாவற்றிற்கும் உரையும் எழுதப்பட்டுள்ளது.

R. No. 1048

Paper 11 × 9¾ inches. Foll. 93. Lines 20 on a page. Tamil Good. New.

Restored in 1934 from a Ms. of this Library.

விசுவாமித்திர வாக்கியம் (வைத்தியக்களஞ்சியம்)

VIŚUVĀMITTYRAVĀKKIYAM (VAIDDYAKKALAÑCIYAM).

Same work as that described under No. 1917 and the T.D.C. Vol. V. being a copy of the work described therein.

(கு - பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1917-ஆவது நம்பரில் வந்துள்ள நூலைப்பார்த்து எழுதிவைத்ததாகும் : எழுத்துப் பிழைகள் உள.

R. No. 1049.

Paper. 11 × 9¾ inches. Foll. 57. Lines, 20 on a page. Tamil. Good. New.

Restored in 1934 from a MS of this Library.

திருவாளொளிபுற்றூர் தலபுராணம்.

TIRUVĀḶOḶIPUṞṞŪR TALAPURĀṆAM.

Same work as that described under No. 593.ante, being a copy of the work described therein.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 593 ஆவது நம்பரில் வந்துள்ள நூலைப் பார்த்து எழுதப் பெற்றதாகும். இதுவரையிலும் அச்சிடப்பெறாதது.

R. No. 1050.

Paper. 11 × 9¾ inches. Foll. 107. Lines, 20 on a page. Tamil. Good. New.

Transcribed in 1934 from a MS. of Mahāmahopādhyāya U. V. Svāminātha Ayyar Aḷ.

வசு சரித்திரம்.

VASU CARITTIRAM.

The story of Uparicaravasu. This work is a rendering, in Tamil verse, by Toṇḍamānṟuṟai Ambalattāḍum Ayyar, of a Telugu work of the same name by Rāmarājabhūṣaṇa Kavi. In the *Mugavuraip-paḍalam* of this work itself, it is stated that this was written at the instance of Timma Bhūpāla (Timmayya) son of Tirumalairāya.

Beginning :

வசு சரித்திரம்.

வானனத்தன் வயவயிராவதக்
கோனனத்தன் குலமறை காணொணுத்
தானனத்தன் தனியுதவுங்கரி
யானனத்தன் அடியிணை போற்றுவாம்.

வேல் வாழி. மயில்வாழி. சண்முகன்துணை.

சிவன்செயல். வயிரவன்துணை.

முகவுரைப்படலம்.

நீர்கொண்ட முகில்வண்ணன் முதலமரருயிருய்ய நிறைந்தவாழிக்
கார்கொண்ட விடமுண்டு கறுத்தமிடறுடையானைக் கமலமேவுஞ்
சீர்கொண்ட திருவாளிகண்ட புரத்தருட்கடலைச் சிந்தித்தேத்தி
வேர்கொண்ட பவக்காடு கடந்து பரமானந்த வீடுசேர்வாம். (1)

தலைமீது பிறைபாரம் புணைந்துபல மணிப்பணிகடரித்துக் கையி
றுலவாது முளரிகொடு பெருவரையினுதித்தமலஞெத்து நின்ற
மலைமாது திருவாலி நகர்மாது சசிமாது வனசமாது
கலைமாது பணியு மெழிலுமைமாது பதமலரைக் கருத்துள்வைப்
[பாம். (உ)

* * * * * *

வசு சரித்திரம்.

மலர்தலை யுலகம்போற்றும் வசுசரித்திரத்தை வல்ல
புலவர்களிருக்கயானும் புகலுதற்குன்னுந்தன்மை
யிலகுசீருடைய வன்னமென்னவே புனலகற்றி
யுலவுறு குரண்டம்பாலையுண்ணிய கருதற்போலும். (ரு)

* * * * * *

மேதகு மினையபெற்றி மேவிய திம்மயன்றன்
மூதறிவுடைமை தோன்ற முதிர் புகழ்வசுவின்சீரை
யோதுக வென்று னென்பாலுயர்பல வரிசைநல்கி
யாப்பினியம்ப லுற்றேனறுமுகன் கருணைகொண்டு. (ந௬)

விரிபுகழ்சேர் வசுசரிதை தெலுங்கையருந்தமிழதனுல் விளம்புதற்கே
யுரிய கலைபயி னமச்சிவாய தேவனுக்கருத்த முரைசெய்தானுற்
பெருமையுற விதழ்குயா ராமகதைத் தொடைபுனைந்தோன்போள்
[ஞானத்
திருமருவும் வீரசைவப் பாலையன்சேய் பாலைய தேவன்றானே. (௪௰)

முகவுரைப்படலம் முற்றும்.

நகரப்படலம்.

நவிலரும்பெருமைத்தாய நைமிசவனத்தில் வைகுஞ்
சவுனகர்முதலாயுள்ள தாபதர்யாருங்கூடிக்
கவிஞர்தாம் புகழுரோம கருட? தன்னை நோக்கி
யுவமையி லமுதமாரி பொழிந்தெனவுரைக்கலுற்றார். (க)

கொற்றவிண் மகவாளியுங்குறைவிலா வளங்களோடு
முற்றணி மானதரிதறி மொழிக்கருங் கடவுட்டன்மை
பெற்றுவான வனியெங்கும் பெட்புறச் சரிக்கவல்ல
நற்றவை வரசன் யாவனென்னநவிறலுற்றான். (உ)

முனிவர்காணீவிர் சொன்ன முறைபெறு மிறையாரென்னின்
மனுநெறி தவருச்செங்கோல் வாய்த்துள வசுவென்றேதுந்
தனியிறை யொருவனுண்டாற்றகை வுடைச்சேதி நாடன்
குனிசிலை மதனன் போல்வானவன்புகழ் கூறற்பாற்றே. (ந)

மன்னவர் மன்னன் சீர்சால் வசுவெனு நாமவேலான்
தன்னிகரின்றி வாழுந்தனி நகர் யாதோ வென்னி
லுன்னருஞ் செல்வத்தோங்கியுயர திட்டானமாகு
மந்நகர் வளத்தை மாற்றீண்டறைகுவல் சிறிதுகேண்மின். (௪)

* * * * * *

End :

கலைமுனிவரர்க்கு ரோமகருடணனுரைத்தவாறே
மலைவற வுரைத்த கொற்ற வசுசரித்திரத்தைக் கற்றோர்
தளையறங் கல்விச்செல்வம் சார்ந்தருங்கவிதைவல்லோ
ரிலகுபோவையினி ரப மெய்திவீற்றிருப்பர்மாதோ (௬௭)

செந்தமிழ் வளர்க மிக்க திங்கண்மும்மாரி பெய்க
மைந்தொடு செங்கோல் வாழ்க மாதவ முயர்கமாறு
தந்தமிலறங்களோடு மருங்குடி பொலிகநீடு
சந்த நான்மறையு மாவுந்தழைக விவ்வுலகிலென்றும் (௬௭)

மீட்சிப்படலம் முற்றும்: ஆகவிருத்தம் (௧00௧)

Colophon :

வரிபுகழ் வசுசரிதமெனுந் தெலுங்கினருத்தமதை விரித்துரைத்தா
ரிருவர்மாதுல னமச்சிவாயய்யன் பாவய்யனிவர்கள் பூவிற்
சொருபமிகு தமிழ்செய்தான் வீரமிகுதொண்டைமாந்துறையில்
வாழும்
பெருமை திகழ்ந்திருக்கு மம்பலத்தாடு மய்யனெனப் பேர்பெற்
றோனே:

(கு - பு:)—

இந்த "வசுசரித்திரம்,, என்றநூல்" உபரிசரவசு" என்ற மிகப்பெருமை வாய்ந்தவரது சரித்திர வரலாற்றினையுணர்த்துவது ; இது, தெலுங்கில் 'ராமராஜபூஷணகவி' என்றகவிச்ரேஷ்டரான் இயற்றப்பெற்ற வசுசரித்திரத்தை முதல் நூலாகக்கொண்டு தமிழில் தொண்டமான்றுறை 'அம்பலத்தாடும் அய்யன், என்பவரால் வழிநூலாக வாக்கப்பெற்றதொரு பிரபந்த விசேடமாகும். இப்பிரபந்தத்தைத் திருமலைராயன்றன் மகனாகிய திம்மபூபாலன் (திம்மய்யன்) என்பவர் ஆக்குவித்தார் என்று இந்நூலாசிரியரே முகவுரைப்படலத்தில் "மேதகுமிளையபெற்றி மேவியதிம்மயன்றன்" (௩௯) ஆவது செய்யுளால் உணர்த்திப்போருகின்றார்; இது. முகவுரைப்படலம்,, ஆதியாக 'மீட்சிப்படலம்' வரையாக முப்பத்து மூன்று படலங்களைக்கொண்டுள்ளது. இதுவரையிலும் அச்சிடப்பெறாததொரு அரிய நூலாகும்; இச்சரித்திரத்தை வட மொழியிலும் 'காளஹஸ்திகவி' என்பவர் ஒருவர் 'வசுசரித்திரம்' என்றதாய் ஒரு நூல் இயற்றியுள்ளதாகவும் கூறுவர்; மற்றுஞ்சில 'ஸ்காந்தம்' முதலிய புராணங்களும் கூறுகின்றன; இறுதியில் படலவட்டவணை ஒன்று எழுதப்பட்டுள்ளது. எழுத்துப்பிழைகளிருக்கின்றன.

R. No. 1051.

Paper 11 x 9¾ inches. Foll. 60 Lines, 20 on a page. Tamil. Good. New.

Transcribed in 1934 from a MS. of Mahāmahopādhyāya U.V. Svaminātha Ayyar Avl.

பாரதம் ஆதிபர்வத்தாதிபர்வம்.
BHĀRATAM ĀDIPARVATTĀDIPARVAM.

This work is a sort of supplement to the *Ādiparvam* of the *Mahābhāratam* by *Villiputtūrār*, and contains, in a more detailed form, episodes and stories, relating to the *Ādiparvam*, but briefly referred to, or even omitted, by Villiputtūrār in his work.

Beginning :

பாரதம் ஆதிபர்வத்தாதிபர்வம் :

காப்பு :—

நீடாழியுலகத்து மறைநாலோ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்புகூர்வாமரோ. (க)

பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே இடந்து சங்கத்
திருப்பிலே யிருந்துவைகை யேட்டிலே தவழ்ந்தபேதை
நெருப்பிலே நின்றுகற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்றபாவை மருங்கிலே வளருகின்றாள். (உ)

வெள்ளை வாரணப் பிள்ளையார்பத
முள்ளமாமனக் கள்ளமாறுமே. (ங)

இந்நூலார் செய்த துதிகள் :—

சீர்வளர் வாலிகண்ட புரத்தரன் செய்யதாளும்
பேர்வளரமலன் பங்கிற்பெரிய நாயகிபொற்றாளும்
ஏர்வள ரவர்களீன்ற பிள்ளைகளிருவர்தாளும்
நார்வளருளத்திருத்தி நாடொறும் பணிதல் செய்வாம். (க)

* * * * * * * *

பெருமைதிகழமரர் தொழுஞ்சயந்தனை
விண்ணோரிறைவன் பெற்றதென்ன
திருமலை பெற்றருளுமணிபண்டகுள ?
விளக்காருந் திம்மபூபன்
பரிவொடு பாரதத்தாதி பருவத்தாதி
பருவத்தாதிதனைப் பகருகென்று
னருமையெனக் காறுலுஞ் சொல்லுகின்றேனுமை
குமரனருளைக் கொண்டே. (ங)

பைந்தமிழெல்லாம் வல்ல வில்லிபுத்தூரன்
பகர்ந்த பாரதத்திற்
சந்தமுறு மாதிபருவத்தின்
முதற்சந்தனுவின் சரிதங்காறும்
புந்திமிகும் புலவோர்முன்னென்று
மறியாதேனும் புகலுகின்றேன்
எந்தை பெருமான் பரமன்றிருடிமுடியி
லெருக்கலரு மிருக்குமாபோல். (அ)

* * * * * *

முகனுரைச் சருக்கம்.

* * * * * *

தென்னர் சேரலர் செம்பியரெனப் பெயர்சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய வரிசையாலுயர்ந்தோர்
முன்னரெண்ணிய முத்தமிழ்ப் பாவலரெவரும்
பின்னர்வந்தொரு வடிவுகொண்டனரெனப் பிறந்தோன். (௰௫)

தாரகாயணன் வண்டலைத் தண்டலைச் சனியூர்
வீர ராகவனருள் பெறும் வில்லி புத்தூரச
னாராமுடி மண்மிசையுயர் புகழ்நிறுத்தித்
திரகாளம் பெறுதலின் யாரினுஞ்சிறந்தோன் (௰௬)

* * * * * * *

ஆற்றிய மெய்ச்செல்வத் தாலளகையை வென்றருங்
கவிஞலமரளுரை வைகை யென்னு நன்னகரி மருவுபாகை
மாற்றிய பொற்றடமதில் சூழ்வக்க பாகையினறத்தின்
வடிவம் போலத்
தோற்றிய வக்கொங்கர்பிரான் சூழ் தமிழானுட் கொண்டான்
சுற்றத் தோடு
போற்றிய விப்புவி முழுதுந்தன்றிருப் பேர்மொழி
கொண்டே புரந்தானம்மா (உ௰)

பிறந்துய்யக் கொண்டானிப் பேருலகிற் பெருவாழ்வு கூருநாளில்
நிறைந்த புகழ்ச்சனிநல்லூர் வில்லி புத்தூரனை
நோக்கி நீயுநானும்
பிறந்த திசைக்கிசை நிற்பப்பாரதமாம் பெருங்கதையைப்
பெரியோர்தங்கள்
சிறந்த செவிக்க முதமெனத் தமிழ்மொழியின்
விருத்தத்தாற் செய்க வென்ருன்: (உக)

இருக்காதி மறைமொழிந்தோனியம்பிய விப்பெருங்
கதையை யாருங் கேட்பச்
சுருக்காகப் புராண முறை சொல்லுக வென்றலின
வனுஞ் சொல்லலுற்றான்
பெருக்காளர் முதலாய பெருங் குலத்தோரிக் கதையின்
பெற்றி கேட்டார்
செருக்காக வவன்மைந்தன் வரந்தருவானிப்பதிபதிகஞ்
செப்பினனே. (உஉ)

முகவுரைச் சருக்கம் முற்றும்.

வினதைச்சருக்கம்:—

திருவனைய வினதையமற் காந்தியு முன்னதவடிவுந்திகழ
மைந்தர்
தருகவெனவும் புரையில் கத்துருவாயிர மைந்தர்
தருகவென்றுங்
கருதியிருங்காசிபனை வேண்டி நெடுந்தவம் புரிந்து
கனிப்பில்காது
மருட்சுரந்த வாறளித்தானி ருவருங்கர்ப்பந்தரித் தாரகங்களி
த்து (க)

* * * * * * *
* * * * * * *

சந்தனுச் சருக்கம்.—

மாதவர் பணிதரு வைசம்பாயனன்
வேதியன்றனைச் சனமேசயன்றெழு
தீதகல் சந்தனுச் செயலெலாம் விரித்
தோதுகவென முனியோதன் மேயினன் (க)

* * * * * * *

அரசனு முணர்ந்து நீயார்கொல் பாலரைத்
திரைசெறி புனலிடைச் செற்றதென் கொலாம்
உரைசெய வேண்டு மென்றுரைப்பவஞ்சியும்
வரிசையினு னுணர்ந்ததன் வரவு கூறினள். (உச)

* * * * * * *

பூரணகவிறைவ கேண் முற்பிறப்பினிற்
றெருள் புணரெண் வகைத்திக்கு பாலரில்
வருணன் நீ விதிசபை வளமை காணிய (உரு)
வான்முகமதியமும் புதியமாலையும்
காண்முக விதழியுங் கமழும்கங்கையா
டேள்முகம் பொழிதரு செய்யதாமரை
நான்முகன் பேரவை நண்ணினேனரே (உசு)

* * * * *

End :

முயலிலாமதி முகத்திஞெளொருவர்
முயலருந்தவ முயன்றபின்
புயலருதமினலொத்த மெய்யிலொளி
புரியிக்கிதனதருளிஞல்
மயலி லாடனது வடிவகற்றியிகல்
யாக சேனனது வயினிடைச்
செயலி லாறு முகனிகரெனத்தகு
சிகண்டியாயினன் சிறக்கவே. (௱௯௬)

மணி முடிக்குரிய நிருபனுங் கடிகொண்
மாதர் தங்களை மகிழ்ச்சியா
லணி பெறத்தழுவியின்ப வேலையி
லழுந்தி நாட்பல கழிந்தபின்
பிணிகளுக்கரசெனும் பெரும்பிணி
பிணித்து வாழ்வினி நணித்தெனப்
பணி முடிப்புவியிரங்க வைகியொரு
பற்றிலாத நெறியும்பற்றினன். (௱௯௭)

சந்தனுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் (௫௱௬௰௬)

ஆதிபர்வத்தாதி பர்வம் முற்றிற்று.

அரவணைச்செல்வன் திருவடி வாழ்க.
யதிராசன் திருவடி வாழ்க.

(கு.பு.)—

இந்நூல், தமிழில் வில்லிபுத்தூரார் இயற்றிய மகாபாரதத்திற்கு அனுபந்தமாய் ஆதிபர்வத்துக்கதைக்கு முந்தியுள்ள வினதைமகப்பேறு முதலாய் "சந்தனுவின் சரித்திரங்காறும் உள்ள பலகதைகளைநுவலுவதாய் அமைந்துள்ளதொரு அருமையான நூலாகும்; திருமலைராயன் குமாரன் "திம்ம பூபாலன்" இதனையியற்றுவதற்கு வேண்டினனாக அதற்கிசைந்து இந்நூலாசிரியர்தாம் இயற்றுவதாகப்பாயிரத்தில் "பெருமைதிகழமரர்தொழுஞ் சயந்தனை", பைந்தமிழெல்லாம் வல்ல வில்லிபுத்தூரான்" என்ற இரண்டு செய்யுட்களான் உணர்த்தி யிருக்கின்றார். இந்நூலாசிரியர் அவையடக்கத்தில், "புந்திமிகும் புலவோர் முன்னென்று மறியாதேனும் புகலுகின்றேன், எந்தை பெருமான் பரமன் திருமுடியிலெருக்கலருமிருக்குமாபோல்" என்று கூறுவதனால் சிவபெருமானை வழிபட்டொழுகுவார் என்பது மாத்திரம் விளங்குகிறதேயன்றி இயற்பெயர் முதலான வரலாற்றிலொன்றேனும் விளங்கிற்றிலது. "முகனுரைச்சருக்கம்", முதலாய் "சந்துனுச்சருக்கம்" வரையிலாகப்பத்துச்சருக்கங்களைக்கொண்டு (566) பாடல்களான் நிரம்பியுள்ளது நடைசிறந்துள்ளது. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. R. 1052. தெய்வயானை புராணம் மூலம்.

DEYVAYĀNAI PURĀṆAM TEXT.

Paper. 10¾. 9¾ inches. Fol, 316. Lines, 20 on a page. Tamil. Good. New.

Transcribed in 1934 from the MS. of Mahāmahōpādhyāya U. V. Svāminātha Ayyar, Madras.

Complete.

A poem, in the Purāṇam style, on the sacred greatness of Goddess Deyvayānai, the Consort of God Subrahmaṇya.

Beginning.

தெய்வயானை புராணம்.

கடவுள் வாழ்த்து.

மலர்தலை மாநிலமாகி மறையாகி
    மறைப்பொருளின வளனுமாகி
யிலகுகதிரொளியாகிச் சராசரமாய்
    விரிந்தவுயிரெல்லாமாகிப்
பலசமயந்தனிலுரைக் கும்பரிசாகி
    யணுவிடத்தும் பரந்து நினறு
கலைகொள் மலர்திகளொழித்துக்
    கதிகாட்டு மொருவனடி கருத்துட்கொள்வாம் (௧)

*   *   *   *   *   *

செறுநீறு படநகைத்த சிவபூசை
    தனக்கலக்கண் செயத தாதை
மறுவீறுதாள் தடிந்த தண்டியிணை
    யடிக்கமலம் வாழ்த்தியேற்றி
தருமாறு படைத்தவெனத்திரு
    குரவரடிதொழுது தவத்தாற்றூய
திருநீறு புணைந்துள்ள சிவனடியா-
    ரடிக்கமலஞ்சென்னி சேர்ப்பாம் (௰௮)

கடவுள் வாழ்த்து முற்றும்.

அவையடக்கம்.

கதிரவன்முன் மின்மினிபோற் கடற் கெதிரேர்
    வாய்க்காலின் காட்சியே போ
லெதிரொருவா நிகரில்லா மாருதமுன்
    வாய்வளியினியற்கையே போல்
மதியொளிமுன் தாரகைபோற் கருடனெதிர்
    பறக்கு மெதிர் பகமே போல
வதிமதுரகவிப்புலவர் முன்சிறியேன்
    சிறிதுரைக்க வமைந்துளேனே (௫)

*   *   *   *   *

பாயிரப்படலம்.

விண்டுதவுமகவாகிச்செனித்தரிய
தவங்கடந்து வேள்விவேந்தன்
பண்டுவளர்த்திட வளர்நதே
யறுமுகத்தெம்மையரிடப்பாகஞ் சேர்ந்த
வெண்டொடியார் பெருங்கதையை
வடமொழி தென்மொழிகளினீண்டுரைத்தாரந்த
வண்டமிழினிலே தெரிந்துயான்
சிறிதென்னுசையினால் வகுக்கலுற்றேன் (க)

* * * * * *

வருத்தமுற முன்னுரைத்தோர்
வழிநூலைப்புடைநூலாய் வகுத்தல்யாப்பில்
விருத்தமெனும் பாவதனாற் பகர்கின்றேன
தன்பெயரை வினவுவீரேல்
மருக்குலவுகரியகுழற் செய்யவாய்ப்
பசுங்கழைத் தோண்மங்கைபேராற்
உரைத்தகதைப்பெயர் தெய்வயானைத்
திருப்புராணமெனவுரைக்கத்தானே (ங)

வேறு.

விருப்பினோடமர்மாக்கதை படித்துளோர்வெம்மை
யரிக்கவல்ல நல்லணங்கினுக் கிவ்வியலமைத்தல்
தருக்குலாவிய கலியுகந்தனிற் பகர்சகாத்த
மருத்தியாயிரத்தறு சதநாற்பதாண்டாமால. (சு)

திரத்துறு காண்டமூன்று சேர்ந்தநற் கதையைஞ்னூறு
தரித்தநற் சமர்பன்னொன்று சந்தங்களைம் பத்தாறு
பரித்த தெய்வானைகாதைப் படலங்க ளெழுபான்மூன்று
விருத்த மூவாயிரத்தின்மே லிருநூற் றேழாறே (கஎ)

எம்பெருமாட்டியான விறைவி மாலளித்த கோதை
செம்ப தத்தன்பாற்செய்த செய்யுளைப் படித்துளோரு
மிம்பரி லெழுதினோரு மிதன்பொருளுரைத்தோர் கேட்டோ
ரம்புவி புரந்துவாழ்ந்தே யரன்பதம் பெறுவர்மாதோ (கஅ)

சண்முகம் வாழ்கதண்சடைதரித்த தாளிணைகள் வாழ்க
கண்கள் பன்னிரண்டுடையன் கருணையுங்களிப்பும் வாழ்க
தண்மலர்க்கழுநீர் மார்புந் தாளமாலைகளும் வாழ்க
வண்மை வாரணையாமாதும் வள்ளிநாயகியும் வாழ்க (கக)

கையிடைதிகழ்ந்த செவ்வேற்கருணையோ டிசைந்து வாழ்க
மையறு மயிலினோடும் வாரணம்நாளும் வாழ்க
செய்யவாய் வீரவாகு வாதியாந் தீரவீர
ரையனருள்போல் வாழ்க வாழ்க விவ்வுலகெல்லாம் (ா)

சைவநெறி யுரைத்த படலம் முறறும்.
ஆக உத்தரகாண்டம் கக்கு.
திரு விருத்தம் உருஉ.
ஆகக் காண்டம் ருக்கு எரு.
படலம் எரு க்குத் திருவிருத்தம் ருஉசஉ.

கு. பு.—இந்நூல், கச்சியப்ப முனிவரால் இடற்றப்பெற்ற ‘ கந்த புரா ணத்தை ’ முதல் நூலாகக்கொண்டு இயற்றப்பெற்றதோர் வழி நூலாய் தெய்வயானையின் பெருமை யுணர்த்தும் நூலாகும். நூலாசிரியர்., கொம்மட்டைநகர் ‘ பகவான் ’ என்பவரின் மகனுர், ‘ நல்லான் ’ என்ப வர் ஆவர். இது மூன்று காண்டங்களாய் (எரு) படலங்கள் கொண்டு (ருஉசஉ) (3242) பாடல்களான் முடிவுற்றதென்று சைவநெறி யுரைத்த படலம் (கூஎ) ஆவது பாடலால் தெரிகிறது. ஆகவே இதில் (69) படலங்கள் வரையிலுமே யுளது.

No. 1053. குருகை மான்மியம்.

KURUKAI MANMIYAM.

Paper. 10¾ × 9¾ inches. Foill. 281. Lines, 20 on a page. Tamil. Good. New.

Transcribed in 1934 from a MS. of M. R. Ry. Mahāmahō pādhyāya U. V. Swāminātha Ayyar Avargal.

A poem on the sacred local importance of Kurukai, otherwise known as Āḷvārtirunagari, in the Tinnevelly District.

Seems almost complete.

Beginning :

குருகை மான்மியம்.
கடவுள் வாழ்த்து காப்பு :—

வாழிவாழி நானிலமு மும்மாரியின் வானும்
வாழிவாழி யில்லறமு நல்லறப் பெருவனப்பும்
வாழிவாழி நாலாயிரப் பனுவனுன் மறைநூல்
வாழிவாழி சீ பரங்குசவானை வைகலுமே (க)

இது வாழ்த்து. திருஞானமுத்திரைக் கடவுள் துணை.

கூ௱யரு-ம்ஷூ பிங்களஷூ ஆடிமீ ௰உதேதி செவ்வாய்க்கிழமை நாள் திருவேகாதசியும் உரோஹணி நட்சத்திரமும் பெற்ற அமிர்தயோக நாள் களாக்குளத்திலிருந்து தொடங்கினது.

பூத்ததாமரை யயன்படைக்கப் பொற்புடைக்
கூத்தனுகிய சிவன்றுடைக்குங் கொள்கைசே
ரேத்துதற்கரிய பல்லுலகை யின்புறக்
காத்தமால் குருகைமான்மியத்தைக் காக்கவே (உ)

இது காப்பு.

வாக்கியாயதனுற் பயன்பரனையே வழுத்து
நாக்கினுன்மனிதரையு மேத்தாத ஞானமதுண்
டாக்கியாரியனென வெதிர்ந்தரிய பேதமையும்
நீக்கியோன்கருணையைப் புகழ்ந்திருக்கு நன்னெறியே
இது குரவனை வாழ்த்தல்.

பதிகம்.

பூவாகிநனமணமாய்ப் பொன்னுகியு மொளியாய்ப்
பாவாகியுமிசையாய்ப் பாலாகியுஞ் சுவையாய்
மேவாருயிர்க்குயிராய் வேறுவேறுகி நின்ற
மூவா முழுமுதலின் மூதாரறிவாரே (க)

வெங்கோபமால்யானை விண்பகவே மூலமெனப்
பொங்கோதையையுணர்ந்த தத்துவஞும புத்தேளிா
தங்கோனனைத்துருவுந் தானுன சாரூப
வெங்கோனவனல்லால் யாரோ விறைநிலையே (உ)

கடியார்ப சுந்துளவக் கார்மேனிச் செங்கண்
நெடியானை யெட்டெழுத்தாய் நின்றுனைப் புள்ளின்
கொடியானை யென்னுளத்துட் கொண்டானை யேத்து
மடியா ரடியா ரடியா ரடியேனே (ங)

வேறு.

முந்த நான்முகனிறைவனுலுணர்ந்தருண் முதனூலைச்
செந்தமிழ்ச் சதுமறையெனச் செவிக்கு மின்னமிர் தெள்ளத்
தந்த மாறனிங் கெனது நாவினுமிது தழை சால் பால
வாந்த வாழ்வினை நினைதொறுங்களிக்கு மென்மனமண்ணே (ச)

எழுத்து சொற்பொருள் யாப்பலங்காரமென்றி சைத்தே
வழுத்து மஞ்சதிகாரமுமாசறுத்தறியேன்
பழுத்த பாவலர் பாத பைங்கமலமென் முடிமே
லழுத்து நன்னெறி யாசறக் கற்றதே யறிவேன (ரு)

தீதுணர்ந்த சொற்பேதை நீ தீதுருர் முன்னம்
யாதுணர்ந்திதற் கிசைந்தனை யெனிலியலிசைநூன்
மூதுணர்ந்த நன்புலவர் வாழுலகின் மூதணராக்
கோதுணர்ந்த புன்புலவனு முளனெனுங் குறிக்கே (சு)

வேறு.

இடனுடைப் பராசரன்றன் சேய்வியாதனுக் குரைத்தாங்
கிடனுடைவியாதன்றன் சேயெனுஞ் சுகற் குரைத்த முன்னை
வடமொழிப்பனுவலாய குருகைமான்மியத்தை மண்மேற
படர் புகழாதி நாதபட்டர் தாமுரைப்பவுற்றேன் (அ)

இருக்கு முதற் பனுவலினுலியற்றமிழ் தேர்நாவீரனென்னு மேன்மை
யருட்புயலைப் புகழ்ப்புலமைத் திருக்குருகைப் பெருமாள் பேரன்பு கூறுந்
தருக்குலவும் பொழிற் குருகாபுரிவணிகன் சடையனிதைத்தமிழாற் சாற்றித்
திருக்குருகைப் பெருமாள் வண்கவிராசனெனப்புனைபேர் சிறந்த தொண்றே. (௯)

அறந்திகழாண்டவை யெழுநூற்றிருபான் மூன்றில்
அணிகிளர் கார்த்திகை மாத மெட்டில் வாழ்வு
சிறந்திடுதிங்களினுலுத்திரத்திலே காதசியின்
மகர முகூர்த்தமிவை திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ் மாறர்த் திருமுன்னுதிச்
சுருதியுடன் மிருதியுஞ் சொற்றமிழின் வாய்மை
பிறந்த பெருங்காப்பிய முந்தெரிந்தோர் கேட்கும்
பெற்றியுடனரங் கேற்றப் பெற்றதன்றே (ω)

* * * * * *

மும்மையா முகங்கழிந்தபின் கலியுக முதலுஞ்
செம்மை நாளையிற் பச்சை மாற்காரியார் சேயாய்
நம்மை நாம் புகழ்வான் வருகுவமெனநவின்றே
யெம்மை யாண்டவன் புகழ்ச்சடகோபனுமியல்பும் (ωசு)

* * * * * *

பதிகம் முற்றும்

(க) ஆவது நாடு வாழ்த்துச் சருக்கம்

திருமகளும் புவிமகளும் பொதுவர்குல
மகளெனப்புத் தேளிர் போற்ற
வருமகளுங்கலந்தாடும் பேரின்பக்
கடலானமாயோன் வைகும்
பொருமகரக் கடல் வளைத்த பூதலத்துட்
சிறந்ததெனப் புண்டரீகப்
பெருமகனுர் புகழ்திருநாட்டினைச் சிறியேன்
புகழ்வதற்கென் பேசுமாறே (க]

End :

தெய்வநாயகனே போற்றி செழுமலர்த்தவிசிற்றேன்றுந்
தையல் நாயகனே போற்றி சங்குசக்கிரத்தாய் போற்றி
வையமீரேழும் போற்றும் வானவர் முதவற்றந்த
வையனே போற்றி யென்னுவெழுந்தனரறிவின் மிக்கார் (எசு)

ஒருகை மேற் சங்கமேந்தி யுலம்பொருவலப்பாற் கொற்றந்
தருகைமேற்றிகிரி யேந்துந்தனிப் பெருங்கடவுளாய
முருகைவான் சிறைவண்டுண்டு முரற்பசுந்துளமாயோன்
குருகைமாநகரஞ் சேர்ந்தார் குணபதமுழுதுஞ சேர்ந்தார் (எஎ)

* * * * * *

கு. - பு.—

இந்நூல், 'குருகாபுரி' என்னும் ஆழ்வார்திருநகரியின் பெருமை யுணர்த்துவ தொருநூலாகும், இதில், நாடுவாழ்த்துச் சருக்கம் முதலாய் 'வரம்பெறுச் சருக்கம்' வரையில் உள்ளது. இந்நூலாசிரியர் யாரோவெனின் இந்நூலாரம்பத்துப்பதிகத்து, ஒன்பதாஞ் செய்யுளில் "குருகாபிரிவணிகன் சடையனிதைத்தமிழாற் சாற்றித், திருக்குருகைப் பெருமாள் வண்கவிராச னெனப்புனைபேர் சிறந்ததொன்றே" என்ற தொடர் மொழிகளால், குருகா புரி 'வணிகன் சடையன்' என்றவர் ஆவார் நிற்க, இதனை இந்நூலாசிரியர் நம்ஆழ்வார் திருமுன்னிலையில் கல்விகேள்விகளிற் சிறந்த பெரியார் நிறைந்த பேரவையின்கண் அரங்கேற்றித்திருக்குருகைப் பெருமாள் வண்கவிராசன், என்ற புனை பேரும் பெற்றார் என்ற செய்தியும், பிற செய்தியும் பத்தாம் பாடலால் அறியக்கிடக்கின்றன. இதற்கு முதல் நூல் வடமொழி குருகாமா காத்மியமாகும். அதனை 'ஆதிநாத பட்டர்' என்பவர் உபதேசிக்க, இவர் பெற்றார் என்றதும் தெற்றென விளங்குகிறது.

R. No. 1054.

Paper, 10¾ × 9¾ inches. Foll. 62. Lines, 20 on a page. Tamil. Good. New.

Transcribed in 1934 from a MS. of M.R.Ry. Mahāmahōpādhyāya U. V. Svāminātha Ayyar Avargal, Madras.

கஞ்சனூர் ஆழ்வார் புராணம்
(ஹரதத்தாசார்ய சரித்ரம்.)

KAÑJANŪR ĀḺVĀR PURĀṆAM
(HARADATTĀCĀRYA CARITRAM.)

A poem, in the Purāṇam style, embodying an account of the life of Haradattācārya, the famous *Śaiva* devotee.

Complete.

Beginning:

கஞ்சனூர் ஆழ்வார் புராணம் (அரதத்தாசார்ய சரித்திரம்)

பாயிரச் சருக்கம் :

பொன்னி மாநதிபெருகப் புராணம்
பன்னுமாகமம் விளங்கப் பாங்குடன்
கன்னலார் பணைசிறந்த கஞ்சனூர்
மன்னுமாமத களிற்றை வாழ்த்துவாம். (க)

வேறு :

சீர்பூத்த தண்ணளியி னுருவமுன்
றருண்ஞானஞ் சிறந்த மூர்த்தி
யேர்பூத்த வகிலாண்டம் பலவீன்ற
மலைமகட்கே யிடப்பால் நல்கி

நீர்பூத்த வுளத்தடி யாரிதய
கமலக்கோயில் நிறைந்து நின்ற
கார்பூத்த களத்திறை யெம்மக்கினி
நாயகர் மலர்த்தாள் கருத்துள்வைப்பாம். (௨)

வேறு :

மணிவண்ணன் பொன்வண்ணன் வானவர்கோன்மற்றுள்ளோர்
பணிவண்ணமாகி மிகப்பாடியே யாடியுங்
கணிவண்ண மலர்க்கருளுங் கஞ்சனூராண்டகோ
வணிவண்ண மலர்த்தாளை யனுதினமுமேத்துவாம். (௩)

வேறு :

மிக்க கொன்றை வியன்மதி கூவிள
மக்க மாலைவரவுடன் கங்கையுஞ்
செக்கர் செஞ்சடைமீது செருகிய
வக்கினீ சரடியிணை தாழுவாம். (௪)

* * * * * *

நைமிசாரணியச் சருக்கம் :

நின்முகநளினந்தன்னி னிறைகஞ்சனூரி லாழ்வார்
தன்னுடைசரிதத்தேனைத் தருக்கியுண் சுரும்பதாகி
யன்னதை யருந்திப் போதானுமை யானேமெங்கட்
கின்னமக்காதை தன்னினியல் விரித்துரைக்கவேண்டும் (௰௧)

என்றவர்பணிதலோடு மிருகரஞ் சென்னிசேர்த்திக்
கொன்றையம் வேணியான்றன் குளிர்மலர்ச்சரணம் போற்றிக்
குன்றெனுங் குணத்தான்ஞானங் குலவுபமன்னியன்று
னன்றவர் மனங்கடேர வருள்கொடேயறைவதானன். (௰௨)

என்றுபரவிப் பணிந்தெழுந்தானிறைவன் மிகவுமகிழ்ந்தருளி
நன்றுநீதான் வந்ததென்கொல் நவில்தியெனவேயனுரைப்பான்
மன்றற்கமுங்கஞ்சனூர் மருகில் மாயோன்றவமியற்ற
வென்றிமிகுந்த தவாக்கினியால் வெம்மையுயிர்கட்குற்றதென்றே. (௨௮)

* * * * * *

அருந்தவமியற்றுகின்ற வாழிமாறன்னை நோக்கிப்
பொருந்தவே கருணைவைத்துப் புனிதன்றனழைத்தபோது
வருந்துதலொழிந்து மாயோன்மண்மிசை வீழ்ந்திறைஞ்சித்
திருந்தியவுளத்தனுகிச் செயசெய போற்றியென்றான். (௩௰)

* * * * * *

நின்றுபரவுமாயோனை நிமலன்கருணை மிகவைத்தே
நன்றுநெடுநாள் நின்றவந்தானம்பால் வரம்வேண்டுகென்ன
வன்றுபிருகு சாபத்தையகற்றி யருள்வாயெனப்பணியக்
கொன்றைசூடுஞ் சடையோனுங் குறைவிலருளாலீதுரைப்பான். (௩௨)

அன்பர்மொழிந்த சாபத்தை யகற்றநம்மாலெளிதோதா
னன்பினுடனே தவமியற்றும் வகையானீக்கிநயப்புற்றே
துன்பமுறு மப்பிறவிதனைத்துலைப்பாயீ ரைந்துடலெடுத்திங்
கின்பமனைவிதனை யிழப்பவெட்டாம்பிறவி யாமதனில். (௩௩)

அவதாரச் சருக்கம் :

கொடியராகும் வைணவருட் குருவாம் வாசுதேவனவன்
படியோர்புகழுங் காசிபன்றன் மரபினுதித்தபான்மையினேன்
குடியோம்புதற்குப் புதல்வனில்லாக்குறையான் மிகவுமனந்தளர்ந்தோன்
மிடியோவறியானொருகாலு மிருந்தசெல்வந்தனிற் சிறந்தோன். (உஎ)

* * * * * *

வாசதேவன்விதிப்படியே மாதந்தோறுஞ் சடங்கியற்றத்
தேசாங்கருப்ப நாலிரண்டாமதியிற் சிவனைத்தியானிக்க
வாசையுடனே கிரகங்களனைத்து முச்சமமர்ந்திருப்ப
வாசைமுடையகுழலாளு மகவையினிதா யுயிர்த்தனளே. (௩௧)

ஒருபதுதினமும் வேதவொழுங்கினுற் சாதகன்ம
மருவியசடங்கு முற்றிமற்றை நாட்புனிதமாக
விரவுமஞ்சனமுமாட்டி மேவவே யலங்கரித்துப்
பரவுசக்கிரத்தினுழ்வாரெனும் பெயர்பரித்தான் மாதோ. (சரு)

End :

ஈசனூர்விடைமுன் செல்லவியற் கஞ்சனூரி லாழ்வார்
தேசுடை-விமானமேறிச் சென்றிடை யீரேழில்லத்
தூசிலாவிமானஞ்செல்ல வருட்பெருஞ் சாரன்செல்ல
மாசிலாக் கைலைசார்ந்து மருவிவீற்றிருந்தாரன்றே. (௰௫)

இருமையுநல்கும் ஞானத்தியற் கஞ்சனூரிலாழ்வார்
சரிதையை யுரைப்போர்கேட்போர் தக்கமெய்ப்பொருள்விரிப்போர்
மருவுறுமம்மையீசர் மலர்ப்பத மிம்மைதன்னிற்
றிருவுடனளகை யான்போற்சிறந்துபார் வாழ்வாரன்றே. (௰எ)

வானெடும்புவியும் வாழ்கமறையவர் சைவர்வாழ்க
தேனுவோடரசர் செங்கோற் சிறந்தநற்குடிகள்வாழ்க
பூனலம்பொருந்தத்திங்கட் பொழிந்து மும்மாரிபெய்க
வானினேறுடையான் பூதிபக்கமும் வாழிவாழி. (௰அ)

ஆழ்வார் கைலாயமடைந்த சருக்கம் முற்றும்
ஆகச்சருக்கம் பன்னிரண்டுக்குத்திருவிருத்தம். (ருகூ௰)

கு.-பு. :—

இந்நூல், கஞ்சனூரில் விட்டுணுவின் அம்சமாய் அவதரித்த "அரதத்தாசார்யர்" என்னும் பெரும் பக்தருடைய சரித்திர வரலாற்றை யுணர்த்துவது. இது, ஒரு வீரசைவரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. இதில் அன்னவர்தாம் அவதரித்தது முதலாய்த் 'திருக்கைலாயம்' பெற்றது வரையிலுமான சரித்திரம் முழுவதும் பன்னிரண்டு சருக்கங்களில் கூறப்பட்டுள்ளது, இதுவரையில் அச்சிடப்பெறாதது. முற்றும் உளது. பிழையுள.

No. R. 1055. துறைசைப் புராணம்.

TURAIŚAIPPURĀṆAM.

Paper, 10⅞ × 9⅞ inches. Foll. 269. Lines, 20 on a page. Tamil. Good. New. Transcribed in 1934 from a MS. of M.R.Ry. M.M.U. V. Svāminātha Ayyar Avargal, Madras.

A poem, in the Purāṇam style on the religious local importance of Turaiśai, otherwise known as Tiruvāvaduturai which contains a shrine sacred to God Śiva.

Complete.

Beginning :

துறைசைப்புராணம்:
பொதுப்பாயிரம்:
காப்பு:

காவலிக்குந்தேன் கொடுத்து வளர்த்திடு தென்றமிழ்ப் போதியக்க
[வின்வெற்பீன்ற
மாவனிக்கன்றுலவு துறைசைப் புராணம் வகுப்பநாளும்
பூவளிக்குமிருவருக்குங் காண்பரிதாய் நீண்டுகளற்பொருப்பாய் நின்ற
கோவளிக்குங் குஞ்சரத்திணிருமலர்த்தாடொழுது வரங்கொள்வா
[மன்றே (க)

சிந்தை நினைவுறுதியுஞ் சொற்றமிழ்ச்சுவையும்
பொருட்சுவையுந் தெளிவும்பாசப்
பந்தமறுத்திடும் போதப்பரிவுமளித்
துடனிகழ்வெண்பாவிற்றேன்றச்
சுந்தரக் கன்றுருவாகிக் கயிலைவிட்டுத்
தாய்ப்பசுவின்றுணையாய்க்கூட
வந்தருண்முழ் மதத்துதிக்கை வாரணத்
திணிருமலர்த்தாள் வழுத்தல் செய்வாம் (உ)

வேறு:

வையம் வாழ்க விண்மாரிபெய்க நன்மன்னனோங்க மறைக்குலத்
தையர்செய்மகநீள்க வைந்துறுப்பானினங் கடமைக்கநீள்
பொய்யிலாகமவேத நன்னெறிபொலிகமேன்மை வெண்ணீறு
சைவநீடுக நீடுக கதிதங்குமஞ்செழுத்துண்மையே (௩)

பொதுப்பாயிரம் முற்றும்:
சிறப்புப்பாயிரம்:
கடவுள் வணக்கம் :

நீருலவு செஞ்சடைபின்றாழ முயலகன்மீது நின்றுமன்றிற்
றூருலவுகுழலுமையாள் கண்களிப்பவன்பர் பவத்தகை தீர்ந்துய்யக்
காருலவு மிடறிலங்கக்கை வீசிக்குஞ்சிதத்தாள் காட்டியாடுஞ்
சீருலவுமாவடு தண்டுறைமருவுபரம் பொருளைச்சிந்தைசெய்வாம் (க)

* * * * * * * * * *

யாவர்களேனு மெநதக குலத்தினி லுதித்தாரேனுந்
தேவர்கடேவனுமஞ் சிவ சிவ வென்றுபேசி
யாவலோடுருகி யேதநுமவர் திருவடிகளை யேற்றி
மேவருந்துறைசையனபா மெய்பதநதொழுதுயவாமே (௩௧)

அவையடககம் :

ஐநதிலககணத தொனறதேனுமறிநதிடா வறிவாலியா
னிநதநற்றுறைசைப்பு ராண மியமபுதற்கிசைகின்றதிங
குந்து சூதாஙகினறியாடுதலொககு மெலாறுளத்துன்னியு
முநதையூழினல் வெளகிடாமலென் மோகமபேசமுதிநததே (௩௨)

ஆதலாலறிஞோர் பொறுப்பதறகைய மிலைறதெவ் வாறணிற்
காதலோடு மினமினிவிளஙகுதற் கண்டிராக்கதிர் காயுமோ
வோதுநற்கதை சிவனதென்னுரை கொணடுவப்பொருமையாற்
கோது பேசுவோர் வீணிலேயுமிகக்குற்றுகையரை யொப்பரே (௩௩)

அவையடக்கம் முற்றும் :

மாணுக்கன வசனம்.

தலமுழுதும் புகழ்வளராவடு தணடுறைசை யரனசரிதையோடு
மிலகுவடமொழியதனைத் தமிழ்விருத்தப் பாவதனுலிசைத்தற் [செயதான
பலதனுவுநதுறைசை வேலப்பகுருவருட்பதிந்த பண்பன் ஞானக்
கலைதெரிந்த சுவாமிநாத முனிவனெனனையுமாள கருணை யோனே (௪௬)

End :

இனிய நனமதுரவாக்கான்மிதிலேசவினறு தொட்டு
நனியருட் சீவனமுததிநற்கதி மேவிஞானச்
சனகனென்றுலக மேததச் சகல சம்பத்திஞேடுங
கனமிகுமளவிற் காலங்களைகணுயுலகங்காத்து (௨௩)

நம்பரிபூரணத்தினணுகென வுரைப்டக்கேட்டுச்
செம்பதுமத்தாள்கள் போற்றிச் சிவசிவவென்று வாழ்ததித்
தம்பெருமிதுலேமேவித் தமருடன் வாழ்ந்து பின்ன
ரின்பநன்முத்தி வீடுற்றிருநதனன் சனகனென்றும் (௨௪)

ஞானநாயகனீ வாழ்க நலந்தரு பொற்றுள் வாழ்க
வூனமிற்றுறைசை வாழ்க வொப்பிலா மூலததாய வாழ்க
தேனுறைமலர் தூஉஞ் செம்பொற்சிங்க மாபீடம் வாழ்க
வானவர் முதலோர் வாழ்க வாழ்க சீரடியெல்லாம் (௨௫)

மிதிலேசன முனிசுவாருடன்வந்துமாசிலாமணியீசனை
யர்ச்சனைசெய்து முத்திபெற்ற அத்தியாயம் முற்றும்.

ஆகத்திரு விருத்தம் (௨௫௧௪)

துறைசைபுராணம் முற்றும்.

மாசிலாமணிநாதர் மலரடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு.—

இந்நூல், ' திருவாவடுதுறை ' யெனவழங்கப்பெறுங் கோமுத்தி க்ஷேத்திரத்தினுடைய பூர்வ வரலாற்றினையும், பெருமையினையும் உணர்த்துவதோர் அரிய நூலாகும்; இதற்கு முதல் நூல் வடமொழி ஸ்காந்தம உருத்திர ஸம்ஹிதையாகும். இது, காசியிற் தவஞ்செய்திருந்த ஜனகருக்குத் தௌம்மியமா முனிவர் உபதேசித்ததாகவமைந்துளது. நூலாசிரியர் திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமிநாத சுவாமிகளாவார். இது, இந்நூலாரம்பத்து 'மாணிக்கக் கவி' என்று தலையங்கமிட்ட தல்முழுதும் புகழ் வளராவடு தண்டுறைசை யரன்சரிதையோதும். என்ற பாடலால் அறியக்கிடக்கிறது. அறுபத்தெட்டு அத்தியாயங்களான முற்றுப்பெற்றது. இதுவரையில் அச்சிடப்பெறாதது. அங்கங்கே எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN INDIA.

NEW BOOK COMPANY, Booksellers, etc., "Kitab Mahal," 188-90, Hornby Road, Bombay.

D. B. TARAPOREVALA SONS & CO., Bombay.

THACKER & CO. (LTD.), Bombay.

N. S. WAGLE, Circulating Agent and Bookseller, No. 6, Tribhuvan Road, Girgaon, Bombay.

THE BOOK COMPANY, Calcutta.

BUTTERWORTH & CO. (LTD.), 6, Hastings Street, Calcutta.

R. CAMBRAY & CO., Calcutta.

THACKER, SPINK & CO., 3, Esplanade East, Calcutta.

K. KRISHNA AYYAR BROTHERS, Booksellers, Publishers, etc., The Round, Trichur (Cochin State).

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA, Post Box No. 501, Park Town, Madras.

CITY BOOK COMPANY, Post Box No. 283, Madras.

C. COOMARASWAMI NAYUDU & SONS, 27 and 35, Chinnathambi Street, Madras.

HIGGINBOTHAMS (LTD.), Mount Road, Madras.

THE LAW PRINTING HOUSE, 11, Mount Road, Madras.

G. A. NATESAN & CO., Madras.

P. R. RAMA IYER & CO., 368, Esplanade Row, Madras.

P. VARADACHARI & CO., Booksellers, 8, Lingha Chetti Street, Madras.

Agent, THE SOUTH INDIA SAIVA-SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, LTD., 6, Coral Merchant Street, Madras.

VENKATRAMA & CO., Educational Publishers and Booksellers, Esplanade, Georgetown, Madras.

THE LITTLE FLOWER COMPANY, Educational Publishers and Booksellers, 44, Lingha Chetti Street, Georgetown, Madras, E.

D. SRI KRISHNAMURTI, Editor of "Grama Paripalana," Ongole (Madras).

E. M. GOPALAKRISHNA KONE, Pudumantapam, Madura (Madras).

NATIONAL WELFARE PUBLICITY, LTD., Mangalore (Madras).

M. SESHACHALAM & CO., Proprietors, The Hindu Press, Masulipatam (Madras).

B. VENKATARAMAN, Correspondent, Permanent Fund Buildings, Neela South Street, Negapatam (Madras).

THE HINDUSTAN PUBLISHING CO., LTD., Rajahmundry (Madras).

THE MODERN STORES, Salem (Madras).

The Proprietor, THE HOUSE OF KNOWLEDGE, Booksellers and Publishers, Palliagraharam P.O., Tanjore (Madras).

S. KRISHNASWAMI & CO., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).

L. VAIDYANATHA AYYAR, Law Bookseller, Teppakulam P.O., Trichinopoly (Madras).

A. VENKATASUBBAN, Law Bookseller, Vellore (Madras).

BHAWNANI & SONS, Booksellers, etc., Connaught Place, New Delhi.

The Manager, THE INTERNATIONAL BOOK SERVICE, Booksellers, Publishers, News Agents and Stationers, Poona 4.

P. N. SWAMINATHA SIVAN & CO., Commission Agents, Booksellers, etc., Pudukkottai State. (Branches also at Karaikudi and Devakottai.)

The Proprietor, THE PUNJAB SANSKRIT BOOK DEPOT, Saidmitha Street, Lahore (Punjab).

MOHANLAL DOSSABHAI SHAH, Books Agent, etc., Rajkot.

B. S. MATHUR & CO., Chatur Vilas, Paota Civil Lines, Jodhpur (Rajputana).

THE BOOKLOVERS' RESORT, Booksellers and News Agents, Taikad, Trivandrum.

NOTICE.

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C. 2, or through any bookseller.